**அரசுத் தேர்வுகள் இயக்ககம், சென்னை 600 006**
**பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை இரண்டாம் ஆண்டு**
**துணைத் தேர்வுகள் ஜூலை / ஆகஸ்ட் 2022**
**தேர்வர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்றல்**

**செய்திக் குறிப்பு**

நடைபெறவுள்ள ஜூலை / ஆகஸ்ட் 2022 பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை இரண்டாம் ஆண்டு (+2) துணைத் தேர்வுகளுக்கு, விண்ணப்பிக்க தகுதியுள்ள தனித்தேர்வர்களிடமிருந்தும், மே 2022 பத்தாம் வகுப்பு மற்றும் மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகள் எழுதி தோல்வியடைந்த / வருகை புரியாத தேர்வர்களிடமிருந்தும் இணைய தளம் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

## பள்ளி மாணவர்கள் விண்ணப்பிக்கும் வழிமுறைகள்

மே 2022 பத்தாம் வகுப்பு / மேல்நிலை இரண்டாம் ஆண்டு (+2) பொதுத் தேர்வினை பள்ளி மாணவர்களாக எழுதி தேர்ச்சி பெறாத / வருகை புரியாத மாணவர்கள், தேர்ச்சி பெறாத பாடங்களை மீண்டும் எழுத அவர்கள் பயின்ற பள்ளிக்கு நேரில் சென்று **27.06.2022 (திங்கட்கிழமை) முதல் 04.07.2022 (திங்கட்கிழமை)** வரையிலான நாட்களில் (03.07.2022 ஞாயிற்றுக்கிழமை நீங்கலாக) காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணிக்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

## தனித்தேர்வர்கள் விண்ணப்பிக்கும் வழிமுறைகள்

ஜூலை / ஆகஸ்ட் 2022 பத்தாம் வகுப்பு / மேல்நிலை இரண்டாம் ஆண்டு துணைத் தேர்விற்கு **புதிதாக விண்ணப்பிக்கும் தகுதியுள்ள தனித்தேர்வர்கள்** மற்றும் **மே 2022** பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாம் ஆண்டு (+1 Arrear) தோல்வியுற்ற பாடங்களுடன் மேல்நிலை இரண்டாம் ஆண்டு (+2) **பொதுத் தேர்வினை எழுதி தேர்ச்சி பெறாத தனித்தேர்வர்களும்** **27.06.2022 (திங்கட்கிழமை) முதல் 04.07.2022 (திங்கட்கிழமை)** வரையிலான நாட்களில் (03.07.2022 ஞாயிற்றுக்கிழமை நீங்கலாக) காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணிக்குள் கல்வி மாவட்ட வாரியாக அமைக்கப்பட்டுள்ள சேவை மையங்கள் (Service centres) வாயிலாக விண்ணப்பிக்கவேண்டும்.

கடந்தாண்டுகளில் நேரடித் தனித்தேர்வராக மேல்நிலை முதலாமாண்டு (+1) தேர்வெழுதி தேர்ச்சி பெறாத தேர்வர்கள் அனைவரும், தற்போது மேல்நிலை இரண்டாமாண்டு (+2) பொதுத்தேர்வெழுதுவதற்கும், முதலாமாண்டு (+1) தேர்வில் தேர்ச்சி பெறாத பாடங்களை மீண்டும் எழுதுவதற்கும் சேர்த்து விண்ணப்பிக்கலாம்.

## விண்ணப்பங்களை ஆன்–லைனில் பதிவு செய்வதற்கு அமைக்கப்பட்டுள்ள அரசுத் தேர்வுகள் சேவை மையங்கள் (Government Examinations Service centres)

கல்வி மாவட்ட வாரியாக அமைக்கப்பட்டுள்ள சேவை மையங்களின் (Government Examinations Service centres) விவரங்கள் மற்றும் ஆன்லைனில் விண்ணப்பங்கள் பதிவு செய்தல் குறித்த தனித்தேர்வர்களுக்கான தகுதி மற்றும் அறிவுரைகள் ஆகியவற்றை www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் விண்ணப்பதாரர்கள் அறிந்து கொள்ளலாம். மேலும், அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகங்கள், அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர் அலுவலகங்கள் மற்றும் அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர் அலுவலகங்கள் வாயிலாகவும் அறிந்து கொள்ளலாம்.

...2...

**<u>பத்தாம் வகுப்புத் தேர்வுக் கட்டணம்</u>:-**

| | | |
|---|---|---|
| 1. | தேர்வுக் கட்டணம் | ரூ.125/- |
| 2. | ஆன்-லைன் பதிவு கட்டணம் | ரூ.50/- |
| | **மொத்தக் கட்டணம்** | **ரூ.175/-** |

**<u>தேர்வுக் கட்டணம் செலுத்தும் முறை</u>:-**

தேர்வுக் கட்டணம் ரூ.125/- மற்றும் ஆன்-லைன் பதிவுக்கட்டணம் ரூ.50/- சேர்த்து மொத்தம் ரூ. 175/-ஐ ஆன்-லைனில் விண்ணப்பிக்கும் பள்ளிகள் / சேவை மையங்களிலேயே பணமாக மட்டுமே செலுத்த வேண்டும்.

**<u>மேல்நிலை இரண்டாம் ஆண்டு தேர்வுக் கட்டணம்</u>**

| | | | |
|---|---|---|---|
| 1. | ஏற்கனவே மேல்நிலை இரண்டாமாண்டு பொதுத் தேர்வெழுதி தோல்வியுற்ற பாடங்களில் தேர்வெழுதும் தேர்வர்கள் மற்றும் மேல்நிலை முதலாமாண்டு (+1) தேர்வெழுதி தோல்வியுற்ற பாடங்களில் தேர்வெழுதும் தேர்வர்கள் | ஒவ்வொரு பாடத்திற்கும் ரூ.50/- வீதம் தேர்வுக் கட்டணமும், அதனுடன் இதரக் கட்டணமாக ரூ35/-ம் செலுத்த வேண்டும். | ஆன்-லைன் பதிவுக் கட்டணம் ரூ.50/- |
| 2. | மேல்நிலை இரண்டாமாண்டு தேர்வினை முதன் முறையாக எழுதவுள்ள தேர்வர்கள் | தேர்வுக் கட்டணம் ரூ.150/-<br>இதரக் கட்டணம் ரூ.35/-<br>மொத்தம் ரூ.185/- | ஆன்-லைன் பதிவுக் கட்டணம் ரூ.50/- |

தேர்வுக் கட்டணம் மற்றும் ஆன்-லைன் பதிவுக் கட்டணத்தினை சேவை மையத்தில் / பள்ளியில் பணமாகச் செலுத்த வேண்டும்.

**<u>சிறப்பு அனுமதித் திட்டம்</u>**

**27.06.2022 (திங்கட்கிழமை) முதல் 04.07.2022 (திங்கட்கிழமை)** வரையிலான நாட்களில் ஜூலை / ஆகஸ்ட் 2022 பத்தாம் வகுப்பு / மேல்நிலை இரண்டாம் ஆண்டு துணைத் தேர்விற்கு விண்ணப்பிக்கத் தவறும் தேர்வர்கள், சிறப்பு அனுமதித் திட்டத்தில் உரிய கட்டணத் தொகையுடன் **05.07.2022 (செவ்வாய் கிழமை) முதல் 07.07.2022 (வியாழக்கிழமை)** வரையிலான நாட்களில் ஆன்-லைனில் விண்ணப்பிக்க வேண்டும்.

**பத்தாம் வகுப்புத் தேர்விற்கு சிறப்பு அனுமதிக் கட்டணம் - ரூ.500/- மற்றும் மேல்நிலை இரண்டாம் ஆண்டு தேர்விற்கு சிறப்பு அனுமதிக் கட்டணம் - ரூ.1000/-**

**<u>தேர்வுக்கூட அனுமதிச் சீட்டுகள் விநியோகம்</u> :-**

ஆன்-லைனில் விண்ணப்பத்தினை பதிவு செய்த பிறகு, தேர்வர்களுக்கு ஒப்புகைச் சீட்டு வழங்கப்படும். அதில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்ப எண்ணை (Application Number) பயன்படுத்தியே அரசுத் தேர்வுத் துறை பின்னர் அறிவிக்கும் நாளில் தேர்வுக்கூட நுழைவுச் சீட்டுகளை (Hall Ticket) பதிவிறக்கம் செய்ய இயலும் என்பதால், ஒப்புகைச் சீட்டினை தனித்தேர்வர்கள் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள வேண்டும்.

தேர்வர் தமக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தேர்வு மையம் குறித்து தேர்வுக்கூட அனுமதிச்சீட்டில் அறிந்து கொள்ளலாம்.

தேர்வு முடிவுகள் வெளியிடப்படும் வரை தனித்தேர்வர்களுக்குத் தேர்வெழுத வழங்கப்படும் அனுமதி தற்காலிகமானது எனவும், தனித்தேர்வர்களின் விண்ணப்பம் மற்றும் தகுதி குறித்து ஆய்வு செய்யப்பட்டப் பின்னரே தேர்வு முடிவுகள் வெளியிடப்படும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

மேலும், இத்தேர்வுகள் சார்ந்த விரிவான தகவல்களை www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் காணலாம்.

## தேர்வுக்கால அட்டவணை

ஜூலை / ஆகஸ்ட் 2022, பத்தாம் வகுப்பு / மேல்நிலை முதலாம் ஆண்டு / இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வுகளுக்கான தேர்வுக் கால அட்டவணைகளை www.dge.tn.gov.in என்ற இணையதளத்தில் அறிந்து கொள்ளலாம்.

## முக்கிய குறிப்பு:

மே 2022 மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்ட பின்னர், ஜூலை / ஆகஸ்ட் 2022 துணைத் தேர்விற்கு விண்ணப்பிப்பதற்கான நாட்கள் குறித்த செய்திக் குறிப்பு வெளியிடப்படும்.

## பொதுவான அறிவுரைகள்:–

- **தேர்வர்கள் பொதுத் தேர்வுகளுக்கு விண்ணப்பிக்க தாங்கள் பயின்ற பள்ளிகள் / தனித்தேர்வு மையங்கள் / சேவை மையங்களுக்கு வரும் பொழுது கட்டாயம் முகக்கவசம் அணிந்து வரவேண்டும்.**

- **போதிய சமூக இடைவெளி கடைப்பிடிக்க வேண்டும்.**

**இயக்குநர்**

**இடம்: சென்னை–6**

**நாள் : .06.2022.**